பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 21 (6—11—68) புதன் ★ வெளியூர்: ஐப்பசி 22 (7—11—68) வியாழன் [இதழ்: 117

பொதுமக்கள் இடத்துக்கே முதலில்!

சென்னை, நவ. 6—

விமான நிலையத்தில் அண்ணா அவர்கள் வந்திறங்கியதும் பொதுமக்கள் கூடியிருந்த இடத்துக்கே முதலில் சென்றார்.

அதன் பிறகே பிரமுகர்கள், கட்சித் தலைவர்கள், அதிகாரிகள் நின்றிருந்த இடத்துக்குச் சென்றார்!

அண்ணாவைக் கண்டது தலைநகரம்

அவர் வருகையால் அகமகிழ்ந்தது தமிழகம்

இலட்சோபலட்சம் மக்கள் திரண்டு நின்று வரவேற்ற காட்சி

சென்னை, நவ. 6—

பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று காலை 8-25 மணிக்கு சென்னை விமானநிலையம் வந்திறங்கினார்கள்.

அண்ணா அவர்களுடன், அண்ணியார், பரிமளம், இரா. செழியன், க. இராசாராம், டாக்டர் சதாசிவம் ஆகியோரும் வந்தனர்.

மீனம்பாக்கம் விமானநிலையத்தில் உள்ளும் புறமும் கூடி நின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்த்தொலி முழக்கி --- கையொலி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

மீனம்பாக்கம் விமானநிலையத்திலிருந்து நுங்கம்பாக்கத்தில் உள்ள அண்ணா அவர்களின் இல்லம் வரை சாலையின் இருமருங்கிலும் திரண்டு நின்ற இலட்சோபலட்சம் மக்கள், அண்ணா அவர்களின் திருவுருவம் கண்டு மகிழ்ச்சியில் திளைத்து ஆரவாரம் செய்தனர்; ஆனந்தக் கண்ணீர் சிந்தினர்; சிலர் ஆனந்தக் கூத்தும் ஆடினர்.

தமிழகத்துத் தலைவர்கள் -- பெருமக்கள் அனைவருமே விமானநிலையம வந்திருந்தனர்; தமிழக ஆளுநர் முதல் அதிகாரிகள் பலரும் வந்து முதலமைச்சரை வரவேற்றனர்.

தலைநகரில் உள்ளவர்கள் மட்டுமன்றி, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமானோர் தனி பஸ்களிலும், கார்களிலும் வந்திருந்தனர்.

'அண்ணா என்றைக்கு வருவார்---எப்போது அவர் திருமுகத்தைப் பார்ப்போம்' என்று ஏங்கி நாட்களை எண்ணிக் கொண்டிருந்த கழகத் தோழர்களும், ஏனையோரும், இன்று பொழுது புலர்ந்ததுமே விமான நிலையம் நோக்கி வந்தவண்ணமிருந்தனர்.

விமான நிலையத்துக்குள் செல்ல அனுமதிச் சீட்டுப் பெற்றவர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டதால், அனுமதிச் சீட்டுப் பெறுதவர்கள் எல்லோரும் விமான நிலையத்தின் வெளியே -- சாலையின் இருமருங்கிலும்--முன் இடம் பிடித்துக்கொண்டு காத்து நின்றனர்.

விமான நிலையத்துக்குள் முக்கியப் பெருமக்களுக்கெனத் தனி இடமும், ஏனைய பொது மக்களுக்கெனத் தனிப் பந்தல் அமைக்கப்பட்ட இடமும் ஒதுக்கப்பட்டிருந்தன.

அத்துணைப்பேரும், அண்ணாந்து உயரே பார்த்த வண்ணமிருந்தனர்; 'எந்த இடத்தில் நின்றால் அண்ணாவை மிக நன்றாகப் பார்க்க முடியும்' என்று ஆராய்ந்து பார்த்து -- அவரவரும் இடம் பிடித்துக்கொண்டு நின்றனர்.

அண்ணா அமர்ந்து வருவதற்கெனத் தமிழக அரசின் போக்குவரத்துத் துறையினர் தனி ஜீப் வண்டி ஒன்றைத் தக்க முறையில் ஆசனங்கள் பொருத்தித் தயாராக வைத்திருந்தனர்.

அண்ணா அவர்களை ஏற்றிக் கொண்டு வந்த 'ஏர் இந்தியா' விமானம், சரியாக 8 - 25 மணிக்குக் கம்பீரமாக வந்து இறங்கியது; அது தொலைவில் கண்ணுக்குத் தெரிந்ததுமே, கூடியிருந்தோர், 'அண்ணா வந்து விட்டார்' --- 'வாழ்க அண்ணா' என்றெல்லாம் முழக்கம் செய்யத் துவங்கி விட்டனர்!

விமானம் வந்து நின்றதும், தோழர்கள் க. இராசாராமும், இரா. செழியனும் வெளியே வந்து கையசைத்தபடி படிக்கட்டில் நின்றனர்; உடன் அண்ணா அவர்கள் வெளியே வந்தார்கள்.

கையசைத்தபடி அண்ணா அவர்கள் வெளியே இறங்கி வந்ததைக் கண்டதும் கூட்டத்தினர் காட்டிய மகிழ்ச்சிப் பெருக்கை எப்படித்தான் வர்ணிப்பது!

அண்ணா அவர்கள் மடமட வென்று தாமே படிக்கட்டின் வழியே இறங்கி, ஏற்கனவே தயாராக நின்றிருந்த திறந்த ஜீப் வண்டியில் அமர்ந்த காட்சியைக் கண்டு அனைவரும் மேலும் மகிழ்ச்சியடைந்தனர்.

குடை பொருத்தப்பட்டிருந்த திறந்த ஜீப் வண்டியில் அண்ணா அமர்ந்திருக்க -- அருகே பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் நின்றிருக்க -- மெல்ல ஊர்ந்து பொதுமக்கள் நின்றிருந்த பந்தல் எதிரே வந்தது -- அந்த ஊர்தி; அந்த இடத்திலே சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீல நாராயணன் பெரிய மாலையும் கையுமாக மகிழ்ச்சி பொங்க நின்றிருந்தார்; 'மாலை அணிவிக்க வேண்டாம்' என்ற வேண்டுகோளுக்கு அவர் மட்டும் விதிவிலக்கா என்ன? மாலையணிவிக்க வாய்ப்பில்லாதவாறு 'ஜீப்' வண்டி பிரமுகர்கள் நின்றிருந்த பக்கம் திரும்பிவிட்டது.

அனைவரும் கரங் கூப்பியும், கையசைத்தும், அகமும் முகமும் மலர வரவேற்றனர்.

அனைவருக்கும் பதில் வணக்கம் தெரிவித்தவாறு மலர்ந்த முகத்துடன் மகிழ்ச்சிப் புன்னகை தவழ அண்ணா அவர்கள் அமர்ந்து சென்ற காட்சி, கண்டவர் கண்களிலேயே நிற்கிறது!

அண்ணா வந்திறங்கியதும், ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் முதலில் வரவேற்றார்; மற்றும், அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழகன், கோவிந்தசாமி, மாதவன், சாதிக் பாட்சா, முத்துசாமி, மற்றும் அரசாங்கத் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் வரவேற்றனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ் இராசேந்திரன் ஆகியோர்

(4-ம் பக்கம் பார்க்க)

பொழுது புலர்ந்தது-

யாம் செய்த 'தவத்'தால்!

மீண்டும் மீனம்பாக்கம் விமான நிலையம்!

அன்றுபோல் இன்றும் இதயங்களின் வரிசை!

கடந்த செப்டம்பர் 10-ம் நாளன்று இமைகளை மறைக்கும் நீர்ப் படலத்துடன் நின்று வழியனுப்பிய நெஞ்சங்கள் இப்போது திரும்பவும் அண்ணாந்து பார்த்து நிற்கின்றன!

இடையில் சுமார் ஐம்பத்தாறு நாட்கள்; ஆனால், இதுவரையில் கலையாமலே நின்றுகொண்டிருந்தவர்கள்போல் தோன்றுகிறது! அத்துணை முக்கியத்துவம் பெற்றுவிட்ட இடைவெளி!

ஐம்பத்தொன்பது வயதாக இருக்கும்போது அறுவைச் சிகிச்சைக்குச் சென்றவர், அறுபதாவது வயதில் நலமுடன் திரும்பியிருக்கிறார்!

கழகத்தின் பொருளாளர் நயம்பட எடுத்துச் சொல்லியபடி நமது அண்ணா அவர்கள், இருமுறை பிறந்துவிட்டார்!

மில்லர் என்றொரு மானிடரின் மருத்துவம் --- தமிழ் கூறும் நல்லுலகின் ஆசி --- கழகத் தம்பிமார்களின் இதயத் துடிப்பு--துயரைத் தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்பியிருக்கின்றன!

ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்கவும் துணிவற்று, சோகம் கப்பிய நிலையில் அன்று வாழ்த்தி வழியனுப்பிய மக்கள் கூட்டம், இன்று மகிழ்ச்சியில் திளைத்து வரவேற்கக் கூடியிருந்த காட்சி, வாழ்நாளில் மறக்க முடியாத இரு பெரும் சம்பவங்கள்தாம்!

'உரைகல்' என்று கூறத்தக்க ஒரே சான்று—

விமான நிலையத்துக்கு வழியனுப்ப வந்திருந்த பெரியார் அவர்களின் துயரம் தோய்ந்த முகம், தமது மனத் திரையில் ஆழப் பதிந்துவிட்டதாக அண்ணா அவர்களே தமது நியூயார்க் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது, வைர வரிகளா ஆகும்!

அனுபவ முத்திரைகள் பல பெற்றுக் காலத்தின் அடிச்சுவடுகளுக்குப் பக்குவம் பெற்றுவிட்ட அந்த அரசியல் தந்தையே மனம் பதற --- உணர்ச்சிகளைத் தேக்கிவைக்க முடியாமல் --- முகத்தில் பிரதிபலித்து, 'நலமுடன் திரும்ப வேண்டும்' என்று எண்ணிய எண்ணம் எப்படிப் பொய்த்துவிடும்!

பொழுது புலர்ந்துவிட்டது -- 'தவம்' பலித்துவிட்டது!

'ஒளி' நம்மிடமிருந்து சிறிது அகன்றிருந்த இந்த இடைப்பட்ட காலத்தில்......!

பிரிவினைத் தாளாமல் நாம் இருந்த அந்த நேரத்திலும் பிரிவு மட்டுமல்ல -- பிணித் துன்பத்தினையும் தாங்கிய அண்ணாவின் ஆறுதல் குணம், பொறுமைப் பண்பு ஆகியவை, உலகின் கவனத்தைக் கவர்ந்துவிட்ட டாக்டர் மில்லருக்கும் வியப்பினைத் தந்துள்ளது!

சரித்திரத்தில் முதலிடமும் முக்கிய இடமும் பெற்றுள்ள ஓர் இனத்தின் அண்மைக்கால அரசியல் நோயினைப் போக்கிய மருத்துவராம் அண்ணாவின் திறன் -- பெருமை -- தனித்தன்மை -- அறிவின் ஆழம் ஆகியவை, அவருக்கு வந்துள்ள உடல் நோயின்போது உலகத்தவர் பார்வையில் இன்னும் சற்று பரவலாகப் பட்டிருக்கிறது!

அமெரிக்காவில் உடல் நலம்பெறத் தங்கியிருந்த இந்த ஐம்பத்தாறு நாட்களில்கூட அவர் தனது தனித் தன்மையினால் — அறிவுச் சிறப்பினால் கழகத்துக்கும், தமிழகத்துக்கும் தேடித் தந்திருக்கும் பெருமையினை -- புகழினைச் சற்று ஆழ்ந்து சிந்திப்பதன்மூலமே புரிந்துகொள்ள முடியும்.

மலைபோல் வந்த நோய், பனிபோல் விலகியிருக்கிறது!

அனைவரது இதயத்தையும் சுட்ட அந்த ஆபத்தான இடைவெளிக் காலத்திலும் அவர் பெயர், தனது கடமையினைச் செய்து முடித்திருக்கிறது!

பிரிவுத் துன்பத்தினை மட்டும் தாங்கிக்கொள்ளாமல் தவித்த நாம், இந்த இடைப்பட்ட காலத்திலும், 'கழகத்துக்குக் கிடைத்த நமது பங்கு என்ன' என்று இதயத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டிய அரசியல் பாடம் இது!

தாய்ப் பறவை, குஞ்சுகளை நோக்கி வந்துவிட்டது!

குதூகலிப்போம்; ஆனால், 'அவருக்கு இனி 'சுமை'யாக இருக்கமாட்டோம்' என சூளுரைத்துக் கொள்வோம்!

மீனம்பாக்கம் வந்தடைந்த அவரது முகத்தினைக் கூர்ந்து கவனித்தவர்களுக்கு, இந்த உண்மை புலப்படாமல் இருந்திருக்காது!

அன்று கண்களில் நீர் மல்க வாழ்த்தியனுப்பினோம்; ஆனால் அந்த உருவமோ, 'இவர்களின் நெஞ்சங்கள் உடைந்துவிடக்கூடாதே' என்ற ஒரே காரணத்துக்காக, உடல் துன்பத்தினையும் தாங்கிக்கொண்டு, புன்முறுவல் காட்டியபடி விடைபெற்றுக்கொண்டதைக் கண்டோம்!

இன்று விமானத்தின் படிகளில் கால் வைத்தது முதல் இல்லம் செல்லுவதற்குக் காரில் ஏறியது வரையில் அவரது முகக் குறிகள் ஆயிரம் உணர்வுகளைக் காட்டியது! வரவேற்றவர்கள், இன்று மகிழ்ச்சித் திளைப்பில் மூழ்கினர்!

ஆனால் அவரது முகமோ, இதயத்தைக் காட்ட முடியாமல் இன்முகங்களைக் காட்டி வாழ்த்தி நின்ற தம்பிகளை -- தோழர்களை -- தலைவர்களை -- கூர்ந்து பார்த்தபடி கையசைத்து, நன்றியுணர்வினைக் காட்டியதைக் கண்ணாரக் கண்டோம்!

அந்தப் பார்வையின் பொருளினைப் புரிந்து கொள்வோம்! அவர் செல்லும் பாதைக்கு மேலும் அணி சேர்ப்போம்!

—எஸ். ஆர்.

வருமானத்தில் கணிசமான அளவைத் தமிழக அரசு இழக்கிறது --
எனினும் உறுதியுடன் மதுவிலக்கைச் செயல்படுத்துகிறது --
காங்கிரசுக்கு சுசீலா நய்யார் அறிவுரை

வறுமையில் மக்களை வாடவிட்டு வருவாயைப் பெருக்குவது முறையா?

வாழ்க்கையை வளப்படுத்த முயற்சித்தாலன்றி சோஷலிச இலட்சியம் நிறைவேற இயலாது

'குடிப்பது நாகரிகம்' எனும் போக்கு விரைந்து பரவுகிறது -- காங்கிரசுக்காரர்களே இதில் முன்னணியில் நிற்கின்றனர்

குன்கா நகர் (பஞ்ஜி), நவ. 6 —

"தமிழக அரசு மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்துகிறது; மதுவிலக்கை அமுல் நடத்துவதால், தமிழக அரசு, அதன் வருமானத்தில் கணிசமான அளவை இழக்கிறது; அப்படியிருந்தும், அது உறுதியோடு மதுவிலக்குக் கொள்கையைப் பின்பற்றுகிறது.

"ஆனால், காங்கிரசு அரசுகள் பின்வாங்குகின்றன; பம்பாய், மைசூர் ஆகிய மாநிலங்களில் உள்ள அரசுகள், மதுவிலக்கைத் தளர்த்திக் கள்ளுக்கடைகளைத் திறக்கின்றன"

இவ்வாறு, அனைத்திந்தியக் காங்கிரசு செயற்குழுக் கூடடத்தில், அனைத்திந்திய மதுவிலக்குக் குழுத் தலைவர் டாக்டர் சுசீலா நய்யார் குறிப்பிட்டுக் கூறினார்.

"1969 அக். 2-ம் நாளுக்குள் நாடு முழுவதிலும் முழு மதுவிலக்கைச் செயல்படுத்த வேண்டும்; மதுவிலக்கைக் கைவிட்ட காங்கிரசு ஆளும் மாநிலங்கள், மீண்டும் மதுவிலக்கைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டும்"

எனக் கோரும் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது :-

"குடிப் பழக்கம்தான், ரோமாபுரிப் பேரரசு அழிந்ததற்குக் காரணமாகும்.

இந்தியாவில் யாதவர்கள் அழிந்ததும் மதுவினால்தான்.

"இந்திய மக்கள், எழுத்தறிவு பெருவிட்டாலும் கவலையில்லை; குடிப் பழக்கம் இல்லாமலிருந்தால் போதும்" என்று காந்தியடிகள் கூறியிருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தியா சுதந்தரம் பெற்றபிறகுதான், குடிப்பது ஒரு கௌரவமாகக் கருதப்பட்டிருக்கிறது; காங்கிரசு அமைச்சர்கள், எம்.பி.--க்கள், எம்.எல்.ஏ.—க்கள் பலரும் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர்; இதைக் கண்டிக்கும் தைரியம் பிறருக்கு இல்லை.

தம்முடைய இல்லத்திலிருந்து மதுப் புட்டிகள் திருடு போய்விட்டன என்று மத்திய துணை அமைச்சர்களில் ஒருவரே போலீசாருக்குப் புகார் செய்திருக்கிறார்.

மது அருந்தும் வழக்கம் அதிகரித்து வருகிறது; 'குடிப்பது நாகரிகமானது' என்று இளைஞர்கள் கருதுகின்றனர்; வெளிநாட்டுத் தூதுவர்கள் நடத்தும் விருந்துகளில் இளைஞர்கள் — பெண்களின் கூட்டம் அதிகம் காணப்படுகிறது; காரணம், அங்கு, மது பரிமாறப்படுவதுதான்!

நிலைமை இப்படியே சென்றுகொண்டிருந்தால், இன்னும் சிறிது நாட்களில் காங்கிரசு மாநாட்டுப் பந்தலிலேயே தொண்டர்கள், தண்ணீருக்குப் பதில் 'பீர்' வழங்கக்கூடும்; இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

'வெளிநாடுகளில் மக்கள் குடிக்கவில்லையா?' என்று சிலர் கேட்கக்கூடும்; அங்குள்ள நிலைமை வேறு --- இங்குள்ள நிலைமை வேறு!

'மதுவிலக்கைச் செயல்படுத்தினால் வருவாய் இழப்பு ஏற்படுமே' என்று சில மாநிலங்கள் அங்கலாய்க்கின்றன; மக்களை வறுமையில் வாடவிட்டு வருவாயைப் பெருக்குவதுதான் முறையான செயலா?

சோஷலிச இலட்சியத்துக்குப் பாடுபடுவதாகக் காங்கிரசு கூறுகிறது; இந்த இலட்சியம் எப்படி நிறைவேறும்? மதுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுயநலக் கும்பல்கள், மக்களின் வருவாயைப் பறித்துக்கொண்டிருக்கும் வரையில் சோஷலிச இலட்சியம் ஈடேருது.

மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த அரசு முயல வேண்டும் --- அவர்களை வறியர்களாக்கும் நிலைமையை உருவாக்கக் கூடாது."

இந்தியைத் தென்னகம் ஏற்றுக்கொண்டு விட்டதா?

எந்த ஆதாரத்தில் இப்படிக் கூறினீர்?

நிஜலிங்கப்பாவுக்கு கோதண்ட ராவ் கேள்வி

சென்னை, நவ. 5—

இந்தியைத் தென்னகம் ஏற்றுக்கொண்டுவிட்டதாகக் 'கதை'க்கும் அனைத்திந்தியக் காங்கிரசுத தலைவர் திரு. நிஜலிங்கப்பாவுக்கு, கருநாடகத்தைச் சேர்ந்த சிறந்த அறிவாளரும் இந்தி எதிர்ப்பாளருமான திரு. பி. கோதண்ட ராவ், தக்க பதில் கொடுத்துள்ளார்.

சென்னை 'மெயில்' நாளிதழ் ஆசிரியருக்கு அவர் எழுதியுள்ள மடலில், 'எந்த ஆதாரத்தைக்கொண்டு நிஜலிங்கப்பா இப்படிக் கூறினர்?' என்று கேட்டிருக்கிருர். அவர் எழுதியுள்ள மடல் வருமாறு :—

இந்தியைத் தென்னகம் ஏற்றுக்கொண்டுவிட்டதாக அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறியதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது!

கருநாடக மாநிலத்தில் இந்தியில் 'சுன்னம்' (சைபர்) வாங்கினலும், 'மற்றப் பாடங்களில் அதனைச் சரிக்கட்டக்கூடிய அளவுக்கு மார்க்குகள் வாங்கினல் போதும் -- ஒரு மாணவன் தேர்வு பெற்றுவிடலாம்' என்ற நிலையில்தான் இங்கு இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது; இதனைத்தான், 'ஏற்றுக்கொண்டு' விட்டதாக அவர் கூறினர் போலும்!

இந்தி படிப்போருக்கு மாதம் ரூ. 100 கருநாடக அரசு உதவிப் பணமாகத் தருவதுபோல், ஆங்கிலமோ, கன்னடமோ, உருதுவோ, வேறு எந்த மொழியோ கற்றுக்கொள்பவர்கட்கு இப்போது கொடுக்கப்படுவதில்லை; இதுதான், 'இந்தியை ஏற்றுக்கொண்டதற்கு' அடையாளமா?

இந்தி அரசான இந்திய அரசினரின் நிதியுதவி கொண்டு, தமிழகத்தில் துவக்கப்படவிருப்பதாகக் கூறப்பட்ட இந்திப் பள்ளிகட்கு எதிராகக் கிளர்ச்சி செய்யப்படுகிறதே -- இந்தக் கிளர்ச்சிக்கு இராஜாஜியும் ஆதரவு அளித்து வருகிருரே -- இதுதான், 'இந்தியைத் தென்னகம் ஏற்றுக்கொண்டதற்கு'ச் சான்ரு?

இவ்வாண்டுத் துவக்கத்தில் பெங்களூரில் மாணவர்கள் இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததும், அதன் விளைவாகத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதும் 'இந்தியைத தென்னகம் ஏற்றதற்கு' மற்றோர் அறிகுறியா?

திருவனந்தபுரத்திலுள்ள அனைத்துக் கேரள இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் கிளர்ச்சி நடவடிக்கைகள்தான், 'இந்தியைத் தென்னகம் ஏற்றுக்கொண்டதற்கு' ஆதாரமா?

திருத்திக்கொள்வதற்குத் தயாராகவே இருப்பர்!

"உண்மையில் பற்றுடையவன், பழக்க வழக்கத்தை மதிக்க வேண்டும் என்பதற்காக எதையும் செய்யமாட்டான்; எப்போதும் தன்னைத் திருத்திக்கொள்வதற்குத் தயாராக இருப்பான்; தான் செய்தது தவறு என்று உணரும்போது அதை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்ள வேண்டும்."

—காந்தியார்

கம்பெனிகளிடம் பணம் பெறுவது தவறில்லையாம்!

ருசி கண்ட கட்சியின் தலைவர் கூறுகிருர்!

புதுடில்லி, நவ. 5—

"கம்பெனிகள் தாங்களே விரும்பிக் கொடுக்கும் நன்கொடைகளை அரசியல் கட்சிகள் ஏற்பதில் தவறேதும் இல்லை"

என்று அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கருத்தறிவித்திருக்கிருர்.

பம்பாய் வார இசழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் இதுபற்றி மேலும் கூறியிருப்பதாவது :—

"தணிக்கை, பரிசோதனைகட்கு உட்பட்டுக் கம்பெனிகள் தாமே விருப்பப்பட்டு நன்கொடைகளைக் கொடுக்கும் வரையில் அவற்றை அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லை. இதற்குத் தடை ஏதும் கொண்டுவரப்பட்டால் ஒழுங்கீனங்களும், இலஞ்ச ஊழல்களும் ஏற்படும்."

நேர்மைக்கு ஆபத்து!

நீதிபதி எச்சரிக்கை

கல்கத்தா, நவ. 6

'ஆட்சிப்பீடத்தில் உள்ள கட்சிக்கு நன்கொடைகளை வழங்குவது வர்த்தக நேர்மைக்கு மட்டுமன்றி நிர்வாக நேர்மைக்கும் அபாயகரமானதாகும்"

என்று சல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி பி. பி. முகர்ஜி கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் சுட்டிக்காட்டினர். அவர் மேலும் இதுபற்றிக் குறிப்பிட்டதாவது :—

"நன்கொடையாக வழங்குவதால் ஏற்படக்கூடிய அபாயங்கள் பலவிதமானவை; 'அரசியல் கட்சிகளுக்கு யார் அதிக நன்கொடைகளை தருவது' என்ற ஒரு போட்டி வர்த்தகப் பிரமுகர்களிடையே ஏற்படும்; இந்தப் போட்டியில் நாளாவட்டத்தில் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவர்; நாட்டுக்கும் பாதகம் ஏற்படும்; அரசியலில் பெரிய வர்த்தகர்களின் கை ஓங்கும்."

வேலை இழந்த இந்தி ஆசிரியர்கள்

மாற்று வேலைக்கு அரசு அளிக்கும் சலுகை

சென்னை, நவ. 5—

இரு மொழிக் கொள்கையால் வேலை இழந்த இந்தி ஆசிரியர்களுக்கும், பிற மொழி ஆசிரியர்களுக்கும், அவர்கள் வேறு பாடங்களைக் கற்பிக்கத்தக்கவாறு பயிற்சி அளிக்கத் தமிழக அரசின் கல்வித் துறை முடிவு செய்துள்ளது.

இந்த ஆசிரியர்களில் பள்ளி இறுதி வகுப்புவரை படித்து ஆனல் 'செகண்டரி கிரேடு' ஆசிரியப் பயிற்சி பெருதிருப்பவர்கள், 1969 ஏப்ரலில் ஆசிரியப் பயிற்சி பெற அனுமதிக்கப்படுவார்கள்; அவர்கள் அந்தப் பயிற்சியை முடித்ததும், பயிற்சி பெற்ற 'செகண்டரி கிரேடு' ஆசிரியர்களாக வேலையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

வேலை இழந்தவர்களுள் யாரேனும் பி.ஏ. படித்தவர்களாயிருந்தால், அவர்களுக்கு ஓராண்டுக் காலம் பி.டி. பயிற்சி தரப்படும்; பின்னர் அவர்கள் பி.டி. ஆசிரியர்களாக வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

50,000 பேருக்கு இலவச வீட்டு மனை

சென்னைச் சுற்றுவட்டாரத்தில் வழங்கப்படும்

பட்டா வழங்கு விழாவில் அமைச்சர் மதியழகன் தகவல்

தர்மபுரி, நவ. 6—

"இந்த ஆண்டு 50-ஆயிரம் ஏக்கர் நிலம் ஏழைகளுக்குப் 'பட்டா' செய்து கொடுக்கப்படும்"

என்று உணவு வருவாய்த்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், இங்கு நடந்த விழா ஒன்றில் குறிப்பிட்டார்.

தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

விழாவில் அமைச்சர் மதியழகன், நிலமற்ற 410 ஏழைகளுக்கு ஆயிரம் ஏக்கர் நிலத்தை 'பட்டா' செய்து கொடுத்தார்.

அமைச்சர் பேசுகையில், கடந்த ஆண்டு 30-ஆயிரம் ஏக்கர் நிலம் ஏழைகளுக்கு 'பட்டா' செய்து தரப்பட்டது என்றும், இவ்வாண்டு 50-ஆயிரம் ஏக்கர்வரை ஏழைகளுக்கு 'பட்டா' செய்து கொடுக்க அரசு முடிவெடுத்திருக்கிறது என்றும் கூறினர்.

"சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலுள்ள 50-ஆயிரம்பேருக்கு இன்னும் மூன்று மாத காலத்தில் வீட்டு மனை 'பட்டா' செய்து கொடுக்கப்படும்" என்ருர்.

ரூ. 127 கோடி மதிப்புள்ள உணவுத் தானியங்கள்

இந்தியாவுக்கு அளிக்க அதிபர் ஜான்சன் ஒப்புதல்

வாஷிங்டன், நவ. 6—

சுமார் ரூ 127-கோடி மதிப்புள்ள 23-இலட்சம் டன் உணவுத் தானியங்களை இந்தியாவுக்கு அனுப்ப அதிபர் ஜான்சன் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்தியாவின் உணவுத் தானியக் கையிருப்புச் சேமிப்புக்கு இந்தத் தானியங்கள் பெரிதும் உதவுமாம்.

இந்தியா வற்புறுத்தியிருந்தால் இன்னும் அதிகமாகக்கூட உணவுத் தானியம் கிடைத்திருக்கக் கூடுமாம்.

பள்ளிச் சிறுவரிடை பண்பை வளர்க்க முயற்சி

கட்டுப்பாட்டை ஊக்குவிக்க சிறு சோதனைத் திட்டம்

வேலூர், நவ. 5—

பென்சிலும் ரப்பரும் வாங்க விரும்பும் பள்ளிச் சிறுவர்கள், ஒரு உண்டிக்குள் 10-காசுகளைப் போட்டுவிட்டு ஒரு பென்சிலையும், ரப்பரையும் எடுத்துக்கொள்ளலாம்.

'விற்பனையாளர்' என்று எவரும் இருக்கமாட்டார்கள். காசைப் போட்டுவிட்டுச் சிறுவர்களே இவற்றை எடுத்துச் செல்லலாம்.

வேலூரில் ஊரீஸ் உயர்நிலைப் பள்ளி, வெங்கடேசுவரா உயர்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை முனிசிபல் உயர்நிலைப் பள்ளி, அரசாங்கப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் நவம்பர் 11-ம் நாளன்று இந்த நூதன முறை ஆரம்பிக்கப்படும்.

பள்ளித் தலைமை ஆசிரியர் அறைக்கு வெகு அருகில் இந்த உண்டிகள் வைக்கப்படும்.

பள்ளிச் சிறுவர்களிடையே கட்டுப்பாட்டையும், பண்பையும் வளர்ப்பதில் இந்தத் திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. வடார்க்காடு மாவட்ட குழந்தைகள் உதவிக் கழகம் இதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.

அதிகார வரம்பை மீறி மத்திய அமைச்சர் பேச்சு

நாட்டைப் பிளவுபடுத்தும் வேலையில் இந்திரா அரசு

ஈட்டி முனையில் இந்தியைத் திணிக்க பகவத் ஜா ஆசாத் துடிப்பு

'அமிர்த பஜார் பத்திரிகா'வின் கடும் கண்டனம்

"உயர் மட்டக் கல்விக்குப் பாடமொழியாக இருக்கும் தகுதி இந்திக்குக் கிடையாது என்கிற உண்மையை, மத்திய துணைக் கல்வியமைச்சர் பகத் ஜா ஆசாத்கூட எதிர்க்க முடியாது.

"இந்தி பேசும் மாநிலங்களில் இளைய சமுதாயத்தினரை, இந்தி வாயிலாகக் கல்வி பயிலும்படி கட்டாயப்படுத்துவதன் மூலம், நாட்டின் பெரும் பகுதியில் புதுடில்லி உண்மையிலேயே காலச் சக்கரத்தைத் திருப்பி வைக்க முயலுகிறது.

"ஏற்கனவே உயர் படிப்பின் தரம் மிகவும் தாழ்ந்துவிட்டது; மேற்கிலிருந்து வீசும் புத்துணர்ச்சியூட்டும் காற்று உள்ளே வராமல் சன்னல்களை மூடிவிட்டால், நிலைமை இன்னும் தாழ்ந்த நிலைக்குப் போய்விடும்; இந்தத் தொத்துநோய் மற்ற மொழி மாநிலங்களுக்குப் பரவி, இந்தியா துண்டு துண்டாகப் பிளவுபட்டுப் போய்விடும்; ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொன்றுக்குப் போக வாய்ப்புக் கிடைக்காது; ஒரு மாநிலத்தின் அறிவு வளர்ச்சி மற்ற மாநிலத்தவரால் புரிந்துகொள்ள இயலாமல் போகும்!

"ஆங்கிலத்தின் தரம் ஏற்கனவே குறைந்துபோய்விட்டது; அதன் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டால் அதன் நிலை மேலும் மோசமடையும்.

"ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை இணைப்பு மொழியாக்க முனைவோர், தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளைப் பற்றித் தீவிரமாக எண்ணிப்பார்க்க வேண்டும்.

"இந்தி மொழியைக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை மொழியாக நிலைநாட்டுவதன் மூலம், தேசிய ஒருமைப்பாட்டை அடைந்துவிட முடியாது"

என்று, 'அமிர்த பஜார் பத்திரிகா' (கல்கத்தா) தனது தலையங்கத்தின் மூலம் கருத்தறிவித்துள்ளது. அந்தத் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

அமைச்சர் பகவத் ஜா ஆசாத், அக். 30-ம் நாள் நடைபெற்ற இந்தி மாநிலங்களின் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள்மாநாட்டில் பேசுகையில் தெரிவித்த கருத்துக்கள் — புதுடில்லியின் கொள்கை விளக்கமாக இருக்குமேயானால் — இந்தியாவை மொழிவழி மாநிலங்களாகப் பிளவுபடுத்திவிடும் வேலையை நிறைவு செய்துவைப்பதில் இந்திரா காந்தி அரசாங்கம் உறுதிகொண்டுள்ளதைப் போலத் தெரிகிறது.

அமைச்சர் ஆர்வத்தோடும் உறுதியோடும் பேசினார்; '1973-ம் கல்வி ஆண்டுக்குள் பல்கலைக் கழக அளவில் எல்லாக் கல்விப் பிரிவுகளிலும் இந்தியே பாடமொழியாக ஆக்கப்பட வேண்டும்' என்று அவர் விரும்புகிறார்.

இதை எதிர்க்கும் ஆசிரியர்கள்—அதிக ஆர்வம் காட்டும் அமைச்சரைவிட அவர்கள்--கல்வியைப் பற்றி நன்கு அறிந்தவர்கள்.

எதிர்ப்பினைக்கூட மத்திய துணை அமைச்சர் அலட்சியப்படுத்துகிறார்; 'இந்த மாற்றத்தை (பாடமொழி மாற்றம்) செய்து முடிப்பதை யாரேனும் தடுக்க முயன்றாலும் அரசு அதை அனுமதிக்காது' என்கிற குறிப்பு அமைச்சரின் பேச்சில் புலப்படுகிறது.

இப்படிப்பட்ட சொற்களைப் பயன்படுத்த அவர் சட்டபூர்வமான அதிகாரியல்ல என்பதை மறந்துவிட்டார் போலும்!

கல்வி என்பது, மாநிலங்களுக்குரிய ஒன்று; மத்திய அரசின் பிரதிநிதியாக அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் மாநிலங்களின் துணைவேந்தர்

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

களிடம் சர்வாதிகாரக் குரலில் பேசுவதற்கு அதிகாரம் கிடையாது!

மத்திய அரசு ஆலோசனை சொல்லலாம் -- உதவலாம் -- ஆனால், உத்தரவிட முடியாது!

அரசியல் அமைப்புச் சட்டம் தந்துள்ள அதிகார வரம்பை உணரத் தவறும் புதுடில்லியின் இது போன்ற செயல்களே, மாநிலங்கள் அதிக அதிகாரத்தைத் தரும்படி கோருவதற்குப் பெரும் அளவுக்குக் காரணமாகின்றன.

கல்வியையும் மத்திய அரசின் ஒரு துறையாகச் செய்ய மத்திய கல்வி அமைச்சகம் அண்மையில் முயன்றதையும் அதற்குப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்காததையும் அமைச்சர் ஆசாத் இதற்குள் மறந்திருக்க முடியாது!

அவசரமாகப் பாட மொழியை மாற்றுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அவ்வப்போது பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஆதாரத்துடன் எடுத்துச் சொல்லி வந்துள்ளனர்; ஆனால், அதைத்தான் ஈட்டி முனையில் உடனடியாகச் செய்யவேண்டுமென்கிறார் ஆசாத்!

இது ஒரு அரசியல் முடிவு—ஒரு மொழியின் ஆதிக்கம் இது—என்று பலராலும் கண்டிக்கப்பட்டது! கல்வியின் உண்மையான நலனுக்கு இது உகந்ததல்ல!"

காங்கிரசு ஏட்டின் புளுகுச் செய்தி

திருவில்லிபுத்தூரில் நடந்ததென்ன?

திருவில்லிபுத்தூர் மதுரை ரோடில் அரிசிக்கடை வைத்திருக்கும் கருத்தப்பாண்டியன் என்ற கந்தசாமி நாடார் என்பவர், இராமநாதபுர மாவட்டக் கலெக்டரிடம், 'தி. மு. க. பிரமுகர்கள் அரிசி மூடைகளை கொள்ளையடித்ததாக'க் கொடுத்த பொய்ப் புகாரை, 'ஜெபபேரிகை' (சென்னை 27—10—68; வெளியூர் 28—10—68) இதழில் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் செய்தி தவறானது.

மேற்கு திருவில்லிபுத்தூர் கூட்டுறவு ஸ்டோரிலிருந்து அரிசி மூட்டைகளைக் கடத்திக்கொண்டு போகப்பட்டதை எஸ். ஆர். கிருஷ்ணன், தி. மு. க. தோழர்கள் ச. கிருஷ்ணன், சோமசுந்தரம், அங்கையா ஆகியோர் பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அரிசி கடத்தலுக்கு உடந்தையாக இருந்து வாங்கிக்கொண்ட கருத்தப்பாண்டியன் என்ற கந்தசாமி நாடார் கலெக்டரிடம் தவருக புகார் செய்ததன் பேரில் காங்கிரசுக்காரர்கள், 'ஜெயபேரிகை' பத்திரிகைக்குச் செய்தி கொடுத்து அந்தப் புளுகுச் செய்தியை வெளியிட்டுள்ளார்கள். இங்கே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தற்காலிகமாக மேற்படி மேற்கு திருவில்லிபுத்தூர் பண்டகசாலையின் லைசென்சு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

"பொய்ச் செய்தியை வெளியிட்ட பத்திரிகை மீதும் சம்பந்தப்பட்டவர்கள் மீதும் வழக்குத் தொடர இருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்"

என திருவில்லிபுத்தூர் வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் ஆர். கே. துரை அறிவிக்கிறார்.

432 ஏக்கர் புஞ்சை நஞ்சையாகிறது

நவீன முறையில் நெல் விளைவிக்கப் புதிய திட்டம்

சேலம், நவ. 6—

நாமக்கல், முசிறி பகுதிகளிலுள்ள 432 ஏக்கர் நிலத்தில் நவீன முறையில் விவசாயம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

காவிரி ஆற்றுத் தண்ணீரை கிணற்றுக்குக் கொண்டு சென்று வயலுக்குப் பாய்ச்சவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நாமக்கல் வட்டாரத்தில் ஒருவந்தூரில் காவிரி ஆற்றின் கரையோரத்தில் புஞ்சை நிலமாக உள்ள 432 ஏக்கர் நிலத்தையே இத் திட்டத்திற்குப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டப் பகுதியை வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் சிவசுப்பிரமணியம், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கே. வெங்கடேசன், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அரிபாஸ்கர், நாமக்கல் ஆட்சித் துணைத் தலைவர், மற்றும் முசிறி துணைத் தலைவர், விவசாயிகள் ஆகியோர் பார்வையிட்டனர்.

ஆற்றிலிருந்து பம்பு செட் மூலம் தண்ணீரை எடுத்தால் தங்களுக்கு விவசாயம் பாதிக்கப்படும் என்று காட்டுப்புத்தூர் விவசாயிகள் தெரிவித்ததால் விவசாயிகளைப் பாதிக்காமல் இருக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடும் சமயத்தில் மட்டும் பம்பு செட் மூலம் நிலத்திலுள்ள கிணற்றில் தண்ணீரை நிரப்பி அந்த நிலத்தில் ஒரு போகம் மட்டும் பயிர் செய்வது என்று ஆலோசனை கூறப்பட்டது.

இம்முறையில் செய்தால் மற்ற விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள். அந்தப் பகுதி விவசாயிகள் செலவில் பம்பு செட்டை பொதுப் பணித்துறை அதிகாரிகள் அமைத்து ஆற்றில் அந்தத் தண்ணீரைத் திறந்து விடுவதற்கும் மூடுவதற்கும் கதவு ஒன்றையும் அமைப்பார்கள்.

இதன்மூலம் 432 ஏகரில் மொத்தம் 216 டன் நெல் பயிராகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயம் செய்யப்படாமலிருந்த 432 ஏக்கர் நிலம் இப்புதிய திட்டத்தால் விவசாயத்துக்குக் கொண்டுவரப்படுகிறது.

"விரைவில் இத்திட்டத்தை அரசு பரிசீலனை செய்து உத்தரவிடும்" என்று, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கே. வெங்கடேசன் கூறினார்.

"பத்திரிகைத் தொழிலின் ஒரே நோக்கம், மக்கள் தொண்டாக இருக்க வேண்டும்."

—காந்தியார்

கிராமமக்களின் குறைகள்

அதிகாரி நேரடியாகக் கேட்டறியும் திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது

செல்லும் இடத்திலேயே குறைகளைத் தீர்த்துவைக்க முயற்சி

திருச்சி, நவ. 5—

போதுமக்களின் குறைகளை அதிகாரிகள் நேரடியாகக் கேட்டு அங்கேயே அவற்றைத் தீர்க்கும் முறை திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எல்லாக் கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இதுவரையில் திங்கட்கிழமைதோறும் மாவட்ட தலைமைச் செயலகத்தில், கலெக்டர், மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டுத் தீர்த்துவைத்து வந்தார்.

ஆர். டி. ஓ., மாவட்ட ரேவினியூ அதிகாரி, கலெக்டரின் அந்தரங்கச் செயலாளர் ஆகியோர் ஒவ்வொருவரும் இரு சமுதாய நலத் திட்டப் பகுதிகளுக்குச் சென்று மக்களின் குறைகளைத் துரிதமாகத் தீர்த்து வைப்பர்.

சென்ற செப்டம்பரில் இத்திட்டம் அமுலுக்கு வந்த பிறகு கரம்பக்குடி, முசிறி, மணிகண்டம், அரவாக்குறிச்சி ஆகிய சமுதாய நலத் திட்டப் பகுதிகளுக்கு அதிகாரிகள் சென்று மக்கள் குறைகளைத் தீர்த்து வைத்தனர்.

இதுவரையில் 5,000 மனுக்கள் வந்திருப்பதாகவும், இன்று முதல் 10-ம் நாள் வரை பொன்னமராவதி பகுதியில் தாம் சுற்றுப்பயணம் செய்யப்போவதாயும் கலெக்டர் என். அரிபாஸ்கர் நிருபர்களிடம் கூறினார்.

ஒவ்வொரு கிராமங்களுக்கும் அதிகாரிகள் செல்வர்; குறைகளை அங்கேயே தீர்க்கமுடியாமற்போனால் எப்போது அவற்றுக்குப் பதில் கிடைக்கும் என்பது எழுத்து மூலம் கிராம மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

தொழில் வணிகத் துறை

சேப்பாக்கம், சென்னை-5.

மின்சாரத் தொழிலுக்கான தொழிற்பேட்டை, காக்களூர்

செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூருக்கு அருகில் உள்ள காக்களூரில் மின்சாரத் தொழிலுக்காக நன்கு அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் சதுர அடிக்கு மாதம் 10 காசு வீதம் குறைந்த வாடகையில் 1968 நவம்பர் இறுதிவாக்கில் கீழ்வருமாறு இடவசதி கிடைக்கும்:—

யூனிட்டுகளின் வகை	பயன்படுத்தக் கூடிய இடப் பரப்பு (சதுர மீட்டரில்)	தோராயமான மாத வாடகை
I (இரண்டு எண்ணிக்கை)	529--55 (5700 சதுர அடி)	ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 1.08. (ஒரு சதுர அடிக்கு மாதம் ரூ. 0.10).
II („)	396--70 (4270 „)	
III („)	262--91 (2830 „)	
IV („)	162--58 (1750 „)	
V („)	127--74 (1375 „)	

தேவைப்படும் சிறு தொழில் நிறுவனங்கள், இந்த விளம்பரம் வெளியான இருபத்தோரு நாட்களுக்குள் உரிய விண்ணப்பத் தாளில் சென்னையில் உள்ள தொழில் வணிகத் துறை இயக்குநருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். 'ரெவின்யூ டெபாசிட்' என்ற இனத்தில் தொழில் வணிகத் துறை இயக்குநர் பெயருக்கு ரூ 1000 செலுத்திய தற்கான சான்றிதழை (செலான்) இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஒருவருடைய விண்ணப்பம் ஆராயப்பட்டு அவருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை என்றால், இந்த டெப்பாசிட் தொகை திரும்பக் கொடுக்கப்பட்டுவிடும். மேற்கொண்டு விவரமறிய இந்த அலுவலகத்தின் துணை இயக்குநர் (வணிகத் துறை) அவர்களுடன் தொடர்புகொள்க.

தொலைபேசி: 84314 (எக்ஸ்டென்ஷன் 19)

இயக்குநர், தொழில் வணிகத் துறை,
சென்னை-5.

வெற்றி பெற்றோருக்குப் பாராட்டு-- வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்பு

கழக --- கூட்டணித் தலைவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டம்

சென்னை, நவ. 6—

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில், மாநகராட்சித் தேர்தல் வெற்றி விழா—தி. மு. க.-கூட்டணி உறுப்பினர்கட்குப் பாராட்டு – வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்புப் பொதுக்கூட்டம், நேற்று மாலை நேப்பியர் பூங்காத் திடலில் நடைபெற்றது.

திரு. காஞ்சி மணிமொழியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாநகராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற தி. மு. க.—கூட்டணி உறுப்பினர்கள் அனைவரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்; அவர்கள் அனைவருக்கும் திருக்குறள் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கூட்டத்தில், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சே. மாதவன், மற்றும் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., ஏ. எஸ். கே. அய்யங்கார் (வலது கம்யூ), பரமேசுவரன் (இடது கம்யூ) சி. ஆர் நரசிம்மன் (சுதந்தரா), ஏ. கே. ஏ. அப்துல் சமது (முஸ்லீம் லீக்), கிருட்டிணமூர்த்தி (தமிழரசு கழகம்), எஸ். எஸ். மாரிசாமி (சுதந்தரா) ஆகியோரும் பேசினர்.

குடிவார மசோதா

கருத்தறிவிக்க வாய்ப்பு

சென்னை, நவ. 6—

தமிழக விவசாயக் குடிவார உரிமை பட்டாப் பதிவு மசோதா பற்றிய சட்டமன்ற பொறுக்குக் குழுக் கூட்டம், இத்திங்கள் 18-ம் நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பழைய விடுதியில் காலை 11 மணிக்குக் கூடவிருக்கிறது.

இம்மசோதாவின்மீது கருத்துத் தெரிவிக்க விருப்பமுள்ளவர்கள் அன்று காலை பொதுக்குழுவின் முன் நேரில் சாட்சியம் அளிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆலையில் கதவடைப்பு

கல்கத்தா, நவ. 6—

துர்க்காப்பூர் உருக்காலை கடந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த உருக்காலையில் மின்னியக்கக் கணக்கிடும் இயந்திரம் புகுத்தப்படுவதை எதிர்த்து ஊழியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தே இந்தக் கதவடைப்புச் செய்யப்பட்டிருக்கிறதாம்.

‘கலைச் செல்வம் மிகுந்த கோயில்களை காப்போம்’

‘கழக ஆட்சியின்மீது தவறான எண்ணம் வேண்டாம்’

பத்தினிக்கோட்டக் கல்நாட்டு விழாவில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சீர்காழி, நவ. 5—

“தென்னகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில்களின் கலை சிற்பச் செல்வங்களைப் பாதுகாப்பதில் தமிழக அரசு மிக்க ஆர்வம் கொண்டுள்ளது; கோவில்களையும், விக்கிரகங்களையும் தி. மு. கழக அரசும், தலைவர்களும் புறக்கணித்து விடுவார்கள் என்ற தவறான கருத்தை அகற்றி விடுங்கள்”

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், காவிரிப்பூம்பட்டினத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கண்ணகிக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் (மேலையூர்) எழுப்பப்பெறும் பத்தினிக்கோட்டக் கால்கோள் விழாவில் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

“கோவில்களையும் அங்குள்ள 'தெய்வச் சிலை'களையும் தி.மு.க. அமைச்சரவை புறக்கணித்து விடும் என்று பொது மக்களில் ஒரு பிரிவினரும், பத்திரிகைகள் சிலவும் தவறான கருத்துக் கொண்டுள்ளனர்.

தென்னகத்தில் சரித்திரப் புகழ் பெற்ற கலைச் சிற்பச் செல்வங்கள் நிறைந்துள்ள கோவில்களையும், கட்டடங்களையும் பாதுகாப்பதில், தமிழக அரசு எவ்விதத்திலும் பின்தங்கி விடாது.

கோவில்களின் பூசை, விழாக்களுக்கு ஆகும் வழக்கமான செலவைக் குறைக்கவேண்டும் என்ற விருப்பம் கிடையாது. நியாயமான செலவுகளுக்குப் போக எஞ்சியிருக்கும் அதிகப்படியான நிதிதான் கல்வி முதலிய காரியங்களுக்குத் திருப்பப்படும்.”

பத்தினிக்கோட்டம் எழுப்ப நிலமும் பொருளும் தந்து உதவியுள்ள திரு. இராமலிங்கம் அவரது மனைவியார் திருமதி கௌரி ஆகியோரை அமைச்சர் பாராட்டினார்.

விழாவுக்கு திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

பத்தினிக்கோட்ட அமைப்புப் பற்றித் திரு. சா. கணேசன் சிறப்புரையாற்றினார்.

மேலையூர் – பூம்புகாரில் திருமதி கௌரி அளித்துள்ள 2 ஏக்கர் நிலப்பரப்பில் பத்தினிக்கோட்டம் நிறுவப்படவிருக்கிறது.

மாமல்லபுரத்தைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் திரு. வி. கணபதி ஸ்தபதியார் கைவினை முற்றிய தெய்வப் படிமம்' ஒன்றைச் செய்தளித்துள்ளார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்திற்கு அருகிலேயே நின்று வரவேற்றனர்.

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப், அப்துஸ் சமது, சுதந்தராக் கட்சித் தலைவர் எஸ். எஸ். மாரிசாமி, பார்வர்டு பிளாக் தலைவர் மூக்கையா தேவர், கம்யூனிஸ்டுத் தலைவர்களான எம். கல்யாணசுந்தரம், ஏ. எஸ். கே. ஐயங்கார், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், ச. சோ. கட்சித் தலைவர் நல்லசிவம், பி. சோ. கட்சித் தலைவர் ஏ. ஆர். மாரிமுத்து, காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர் இராமமூர்த்தி, செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார், ஷெரீப் சித்திரா நாராயணசாமி, அரசுத் தலைமை வழக்கறிஞர் நாராயணசாமி முதலியார், அரசு வழக்குரைஞர் பி. ஆர். கோகுலகிருட்டினன், முன்னாள் மேயர்களான எஸ். கிருஷ்ணமூர்த்தி, வி. முனுசாமி, அ. பொ. அரசு, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி, சைவ சித்தாந்தக் கழகத் தலைவர் சுப்பையா பிள்ளை, கலைஞர்களான டி. கே. சண்முகம், டி. கே. பகவதி, கே. ஆர். இராமசாமி, அசோகன், டி. வி. நாராயணசாமி, சி எஸ். ஜெயராமன் மற்றும் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள், காங்கிரசு உட்படப் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்கள், வெளியூர்களிலிருந்து வந்திருந்த கழக மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், நகராட்சி -- ஊராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், மற்றும் கழகத் தோழர்கள் பலரும் விமானநிலையத்தினுள் நின்று வரவேற்றனர்.

விமானநிலையத்திலிருந்து ஜெமினி வரை மவுண்ட் ரோடிலும், அங்கிருந்து திரும்பி நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலும் வந்து அண்ணா அவர்கள் இல்லம் சேர்ந்தார்கள்.

சாலையின் இருமருங்கிலும் தாய்மார்களும், குழந்தைகளும், இளையோரும் முதியோருமாகக் கூடி நின்று வாழ்த்தொலி முழங்கி வரவேற்றனர்.

வழிநெடுகிலும் பல இடங்களில் வரவேற்பு பானர்களும், கொடி-தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

கிண்டியில் நாதசுர இசையுடன் அண்ணாவை வரவேற்றார்கள்.

சைதாப்பேட்டை மர்மலாங் பாலம் அருகில் சைதாப்பேட்டைத் தோழர்கள் அமைத்திருந்த வரவேற்புப் பந்தலில் முரசொலி மாறன் நின்றிருந்து வரவேற்றார்.

அண்ணா அவர்களின் இல்லத்தின் அருகிலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

அண்ணா வந்தடைந்ததும் வீட்டில் குழுமியிருந்த பிரமுகர்களும், நண்பர்களும் வரவேற்றனர்.

‘வெளிநாடுகளில் கைத்தறி துணிக்கு நல்ல விளம்பரம் அவசியம்’

‘தரக்குறைவான துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டதே விற்பனைக் குறைவுக்குக் காரணம்’

‘ஆடைகளாக வாங்குவதையே அங்குள்ளோர் விரும்புகின்றனர்’-- மத்திய அமைச்சரிடம் தூதுக் குழு அறிக்கை தாக்கல்

புதுடில்லி, நவ. 6—

“வெளிநாடுகளில் உள்ள துணி வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் இந்தியாவில் எந்தவகையான துணிகள் கிடைக்கும் என்பது சரியாகத் தெரியவில்லை; இந்தக் குறை நீங்க, வெளிநாடுகளில் கைத்தறித் துணிகளுக்கு நல்ல விளம்பரம் செய்ய வேண்டும்.

“வெளிநாடுகளில் கைத்தறி வாரம், கைத்தறிக் கண்காட்சி ஆகியவற்றையும் நடத்தலாம்.

“வெளிநாடுகளில் கைத்தறித் துணி விற்பனை குறைந்ததற்கு இன்னும் ஒரு காரணம், தரக்குறைவான துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டதுதான்; இந்தக் குறை நீங்க, கைத்தறித் துணி ஏற்றுமதி செய்பவர்கள் ஒன்று சேர்ந்து குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

“வெளிநாட்டு மக்கள், துணிகளை வாங்கித் தைப்பதைவிடச் சட்டையாக வாங்குவதையே அதிகம் விரும்புகிறார்கள்; எனவே, நாமும் ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும்”

இவ்வாறு, ‘வெளிநாடுகளில் கைத்தறித் துணி விற்பனையை அதிகரிக்க என்னென்ன செய்யலாம்’ என்பதுபற்றி அறிந்துவரச் சென்ற தூதுக் குழுவின் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்படுவது குறித்து அறிந்து வர, நாடாளுமன்றத் தி.மு.க. உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் தலைமையில் தூதுக்குழு ஒன்று அனுப்பப்பட்டது தெரிந்ததே.

இத்தூதுக் குழுவினர் இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குச் சென்றனர்; அங்குள்ள துணி விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் ஆகியவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு அந்தக் குழுவினர், டெல்லி வந்து சேர்ந்தனர்; தங்கள் சுற்றுப்பயணம் குறித்து அறிக்கை ஒன்று தயார் செய்தனர்; அந்த அறிக்கையை, மத்திய அரசின் வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கிடம், நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் அளித்தார்.

மறைவு

சென்னை 5-வது வட்ட தி. மு. க. உறுப்பினரும், வள்ளுவர் மன்ற உறுப்பினருமான டில்லிபாபு (வயது 22) 5—11—68 இரவு இயற்கையெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. அன்னாரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தாருக்கு வள்ளுவர் மன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தின் திட்டச் செலவு

காங்கிரசு ஆட்சி மதிப்பீட்டைவிட ரூ. 60 கோடி அதிகம்

செய்தியாளர்களிடம் அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, நவ. 6

தமிழக அமைச்சரவையின் கூட்டம் நேற்று நடைபெற்றபோது, மாநிலத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலை ஆய்வு செய்து, திட்ட முதலீடு ரூ. 643-கோடியாக இருந்ததை ரூ. 624-கோடியாகக் குறைத்தது; இதுபற்றிய இறுதி முடிவை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் எடுப்பார்.

அமைச்சரவைக் கூட்டம் முடிந்தபின், திட்ட இலாகாப் பொறுப்பை வகிக்கும் அமைச்சர் செ. மாதவன், செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:—

“திட்டம்பற்றி மாநில அரசின் பிரதிநிதிகளுடன் திட்டக் குழு, நவ. 23-ம் நாள் பேச்சுவார்த்தை நடத்தும்; பின்னர் திட்டக் குழு, மாநிலத்தின் திட்டத்திற்கு இறுதி உருக் கொடுக்கும்.

“மாநிலத்தின் திட்டத்தில், விவசாயத்துக்கும், மின்சார உற்பத்தித் திட்டத்துக்கும் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது.

“பதவியிலிருந்து காங்கிரசு அமைச்சரவை விலகுவதற்கு முன் தயாரித்த நான்காவது திட்ட நகலில் கண்டுள்ள முதலீட்டைவிட, இப்போது தயாரிக்கப்பட்டுள்ள நகலில் கண்டுள்ள முதலீடு ரூ. 60-கோடி அதிகமாகுமாம்.”

மேயர் தேர்தல்

நவ. 12-ல் நடைபெறும்

சென்னை, நவ. 6—

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள் பதவியேற்கவும், 1968—69-ம்-ம் ஆண்டிற்கு மேயர், துணை மேயர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கவும், சென்னை மாநகராட்சியின் கூட்டத்தை, ஆணையர் ஜே. அ. அம்பாசங்கர், நவம்பர் 12-ந்தேதி மாலை 5-மணிக்கு கூட்டியிருக்கிறார்.

இந்தக் கூட்டத்தில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு ஆணையர், பதவி உறுதிமொழி செய்துவைப்பார்.

உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி முடிந்தபின், மேயர் தேர்தல் நடைபெறும்.

திட்டக் குழுவுடன் நிதித்துறைபிணக்கு

தீர்த்துவைக்க உயர்மட்ட முயற்சி

புதுடில்லி, நவ. 6—

நான்காவது திட்ட வசதிகள் பற்றித் திட்டக் குழுவுக்கும்—நிதித் துறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தீர்க்க முயற்சிப்பதற்குத் திட்டக் குழுவின் கூட்டம் நவ. 8-ம் நாள் நடைபெறும்.

அரசுத் துறை வசதிகள் ரூ. 15,757 கோடியாக இருக்கும் எனக் குழு மதிப்பிடுகிறது; ஆனால், நிதித் துறையின் குழு கூறும் தொகை ரூ. 12,835 கோடியாகும்; இதுவும் நம்பிக்கை வைக்கும் தொகை என நிதித் துறை உயர் அதிகாரிகள் கருதுகின்றனர்.

நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கையால் திட்டத்துக்கு மத்திய வசதியிலிருந்து கிடைக்கும் மிச்சத்தில் வெட்டு ஏற்படக்கூடும்.

நல்ல செயல்கள் பலனளித்தே தீரும்!

“நமது உழைப்பின் பயனை நாம் எதிர்பார்க்காமல் இருக்கலாம்; ஆனால், நல்ல செயல் இறுதியில் பலனளித்தே தீரும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.”

—காந்தியார்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.